தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 சிலை-3 (18-12-1983) | விலை 0-65 காசு | இதழ் எண் : 28 | பகுதி 52

அரசியல், பொருளியல், குமுகவியல் - அதிகாரம் படைத்தவர்கள் கைகளில் ஒடுங்கிவிட்டன!

தடி எடுத்தவன் தண்டல்நாயகம், கொடி எடுத்தவன் கொற்ற நாயகம் - என்றாகி வருகிறது!

அரசியலில் இளைஞர்களின் நாட்டத்தைத் தடுக்கவே, விளையாட்டுகள், வேடிக்கைகள் அதிகப்படுத்தப்படுகின்றன!

அறிஞர், நடுநிலையாளர்தம் கருத்துகள் மதிக்கப்படுவதில்லை!

அரசியல்காரர்களே அறிஞர்கள்! அவர்களுக்கு எடுபிடிகளே அதிகாரிகள்!

நாடு குட்டிச் சுவராய்ப் போய்க் கொண்டிருக்கிறது!

இன்றைய நாட்டு நிலைபற்றிப் பாவலரேற்றின் மனமுடைந்த உரைகள்!

நாட்டின் இன்றைய நிலை, அறிஞர்களுக்கும், மக்கள் நலங்கருதும் நடுநிலையாளர்களுக்கும் மிகவும் கவலை தருவதாக உள்ளது. எங்குப் பார்த்தாலும் அரசியல் ஏமாற்றுகளும் ... தில்லுமுல்லுகளும் பல்கிப் பெருகி விட்டன. அரசியல் கட்சிகள், அன்றாடம் வரவேற்புகள், பாராட்டுகள், பேரணிகள், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் என்னும் பெயரால் ஊரைக் கொள்ளையடித்து மக்களை ஒன்றிலும நாட்டமற்றவர்களாக உருவாக்கி வருகின்றன. நகரில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் திருவிழாப் போல, பணத்தைத் தண்ணீர் போல் செலவழித்து நடத்தப் படுகின்றன. நாட்டை ஆளவந்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மக்களின் அமைவான அறிவு வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கிறார்கள். கலை என்னும் பெயரால் திரைப்படப் பேயர்கள் கழிகாம நிகழ்ச்சிகளைப் போட்டி போட்டுக் கொண்டு நடத்தி மக்கள் மனங்களை நாற அடிக்கிறார்கள்! அரசியல் நிகழ்ச்சிகளுக்கும், திரைப்படக் கொடுங் காட்சிகளுக்கும் அடிக்கப்படும் விளம்பரச் சுவரொட்டிகள் ஏராளம்! ஏராளம்! மக்கள் பணம் கொள்ளை போகிறது! மக்கள் நலம் பாழாய்ப் போகிறது!

எதிர்காலக் குடிமக்களாகவும் நாட்டுப் பொறுப்பாளர்களாகவும் வளர வேண்டிய இளைஞர்களின் நிலை மிகவும் இழிவாகவும். இரங்கத் தக்கதாகவும் உள்ளது. அவர்கள் திருடர்களாகவும் கொலைகாரர்களாகவும் கொள்ளையர்களாகவும் உருமாறி வருகிறார்கள். அவர்கள் கல்விக் கூடங்களில் இருக்கும் நேரத்தை விட மிகுதியான நேரங்களைத் திரைப்பட அரங்குகளிலும் கலைக்கூடங்களிலும் விளையாட்ட மன்றங்களிலும் அரசியல் ஆரவாரங்களிலும் மத மூட நம்பிக்கைகளிலும் போராட்டப் பூசல்களிலும் செலவிடுகிறார்கள். அவர்களின் அரசியல் நாட்டத்தைக் குறைக்கவும் மறைக்கவுமே, நாள்தோறும் விளையாட்டு நிகழ்ச்சிகளையும் வேடிக்கைக் கூத்துகளையும் அரசு நடத்தி வருகிறது. இத்தகைய ஓர் இழிந்த நிலையையும் மேனாடுகளில் நாம் பார்க்கவில்லை.

இங்கு, அரசியல், பொருளியல், குமுகவியல் அனைத்தும் அதிகாரம் படைத்தவர் கைகளில் ஒடுங்கி விட்டன. தடி எடுத்தவன் தண்டல் நாயகம்! கொடி எடுத்தவன் கொற்ற நாயகம் என்ற நிலை உருவாகி

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

எனக்கொரு கொள்கை!

எனக்கொரு கொள்கை!
எனக்கது கடமை!
என்னுயிர் இயக்கமும் அதற்கே!
தனக்கொரு போக்கைத்
தழுவுவார் என்றன்
தடத்தினில் குறுக்கிடல் எதற்கே?

தமிழ்மொழிக் கென்றன்
தனிமுதல் உழைப்பு!
தமிழின நலம்பெறல் இரண்டு!
தமிழ்நில விடுதலைக்
குழைத்திடல் மூன்று!
தாழ்விலும் கைவிடேன் மிரண்டு!

அரசியல் நன்மை
ஆயிரம் வரினும்
அதன்வழித் துளிநலம் நாடேன்!
முரசென முழங்கி
முனைப்புடன் எழுதி
முழுவுழைப் பளிப்பேன்; வாடேன்!

தனிநலம் நாடும்
அணிகளில் சேரேன்!
தம்செயல் குழுக்களில் இணையேன்!
பனி,குளிர், வெயில்,மழை
மானமும் பாரேன்;
பைந்தமிழ், இனநலம் முனைவேன்!

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தொடர்ச்சி-3

நாள்வரிசைச் செயல்விளக்கம் !

பாவலரேறுவின் முதல் ஐரோப்பியச் சுற்றுச்செலவு

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
103)	28-9-83	இரவு 8 வரை	மணிசேகரன் வீட்டில் பு[illegible]மாலை முழுதும் ஓய்வு.
104)	,,	இரவு 8 முதல் இரவு [illegible] வரை	உ.த.மு.க. துணைத்தலைவர் சொக்கலிங்கம் செயலர் கோதண்டபாணி ஆதரவாளர் இலெனின் ஆகியோருடன் செருமனி உ.த.மு.க. அமைப்பு நிகழ்ச்சி குறித்தும், பிற தமிழ்ப் பணி குறித்தும் உரையாடல்.
105)	,,	இரவு 10 30	தங்கல் மணிசேகரன் வீடு.
106)	2[illegible]-9-93	முற்பகல்	உணவுக்குப்பின் ஓய்வு பெர்லின் நகரைச் சுற்றிப் பார்த்தல்.
107)		மாலை 6.45	உ.த மு.க.
108)		முடிவு 9.30	தொடக்க விழா
109)	30-9-83	முற்பகல்	ஓய்வு.
110)	,,	மாலை 6.30 முடிவு 10.40	தமிழீழ மக்கள் விடுதலைக் கழக அன்பர்களுடன் கலந்துரையாடல்.
111)	1-10-73	காலை 9 முதல் பிற்பகல் 4-30	கிழக்கு பெர்லின் வருதல்.
112)	,,	இரவு 7-30	இரவு மணிசேகரன் வீட்டிற்கு இலெனின், சொக்கலிங்கம், குடும்பம் வந்து பேசியிருத்தல்.
113)	,,	இரவு 10-30	மணிசேகரன், சொக்கலிங்கம், இலெ. னின் Zoological garden தொடர்வண்டி நிலையம் வந்து வழியனுப்புதல் Bonn புறப்பாடு.
114)	2-10-83	காலை 8-30	Bonn சேர்தல் மீண்டும்
115)	,,	பகல் 12-00 பிற்பகல் 4- 0	அய்டில்பர்க் (Hydle Berg) சென்று பேரா. தாமோதரன் வீட்டில் உணவு.
116)	,,		சார்புருக்கன்- நிகழ்ச்சிக்கு சென்றது, முன்கூட்டியே போதுமான அறிவிப்பும், காலமும் இன்மையால் நிகழ்ச்சியின்றி வெறுமனே திரும்புதல்.
117)	,,	பிற்பகல் 7 மணி	சார்புருக்கனிலிருந்து அய்ல்பிரான் சென்று இரவு தங்கல்.
118)	3-10-83	காலை 9-30	Stuff grart புறப்பாடு
119)	,,	காலை 10.30	Stuff grart-இல் த.ம.வி.க. அன்பர்களுடன்உரையாடல்
120)	3-10-83	பகல் 11 30	தொடர்வண்டி சுவிட்சர்லாந்து புறப்படல்.

சுவிட்சர்லாந்து நிகழ்ச்சிகள்

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
121)	,,	மாலை 5.15	சுவிட்சர்லாந்து தலைநகரம் பெர்ன் (Bern) சேர்தல்.
122)	,,	மாலை 7 30 இரவு 9.30	பெர்ன் நகரம Worflaufen என்னும் இடத்தில் த ம வி. க. கூட்டத்தில் பேசுதல்
123)	,,	இரவு 11.30 மணியளவில்	அன்பர்கள் கொடுத்த உணவுக்குப்பின் பெர்ன் திருப்புதல் ஓய்வு.
124)	4-10-83		பெர்ன் கடைக்குச் சென்று தேவையான சில பொருள்கள் வாங்குதல்.
125)	,,	இரவு 11:02	தொடர்வண்டி வழி பாரீசு புறப்படல்.
126)	5-10-83	காலை 7 மணி	பாரீசு Gharthi Lyon தொடர்வண்டி நிலையம் வந்திறங்கி இலண்டன் போகும் தொடர்வண்டி நிலையம் (Gharthi Nord) அடைதல்.
127)	,,	9.30 காலை	வண்டி நிலையத்தில் அரிமா, இராசு,யோகேசுவரன்வந்து இலண்டன் வழியனுப்புதல்
128)	,,	பிற்பகல் 4 மணி	கப்பல் வழியும்பின் தொடர் வண்டி வழியும் (Charing cross) தொடர் வண்டி நிலையம் அடைதல்.

இலண்டன் நிகழ்ச்சிகள்

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
129)	5-10-93	மாலை 4 மணி	இலண்டனில் உள்ளMcdern Surrey-இல் உள்ள சீனிவாசன் வீடு அடைதல்.

(தொடரும்)

தொடர்-3

ஐந்து நாடுகளில் முப்பது நாட்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

அப்பொழுது இலண்டன் நேரம் காலை 9 மணி பாரீசு வானூர்தி நிலையத்தில் தங்கியிருந்த மூன்று மணி நேரமும், அங்குள்ள பொத்தகக் கடையொன்றில் நூல்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

3. இலண்டன் சேர்தல்

இலண்டன் வானூர்தி நிலையத்தில் திருவாளர்கள்' அரங்க முருகையன், (ஆசிரியா 'தமிழ்முரசு') வீரசிங்கம் (அமைப்பாளர், தமிழர் முன்னேற்றக் கழகம், இலண்டன்), ம' தேவதாசு (செயலர் த.மு.க.), அ நி. இராசன், கிருட்டிணன் (இலண்டன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக அமைப்பாளர்) சந்தோசம், செல்வன் கதிரவன் ஆகியோர் வந்திருந்து என்னை அன்புடன் வரவேற்றனர். அதன்பின் கிழக்கு இலண்டன் பகுதியில் உள்ள மேனர்பார்க் என்னும் இடத்தில் உள்ள திரு. வீரசிங்கம் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றனர்.

உணவுக்குப்பின் சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு அங்கு என்னைப் பார்க்க வந்திருந்த தமிழர் முன்னேற்றக் கழக அன்பர்கள் திருவாளர்கள் வீர. இரத்தினம் (இவர் பாவலர் செலட்டூரான் என்னும் பெயரில் பாடல்கள் எழுதிவருபவர். சிங்கப்பூரில் 16 ஆண்டுகள் வாழ்ந்தவர்), கி. புருசோத்தமன் (வள்ளலார் நற்பணி மன்ற அமைப்பாளர் ம. வடிவேலு (த.மு.க. துணைச்செயலர்), அ சுந்தரம், புலவர் மாயவன் (கரந்தைக் கல்லூரியில் படித்தவர்), ஆ.தி. இராசன் (சிங்கையில் பிறந்தவர்), வி. இராமசாமி (த.மு.க. உறுப்பினர்), தேவதாசு, த. முரளிதரன் (ஈழத்தமிழர்-கணக்காளர்க்குப் படிக்கும் மாணவர்) முதலியோருடனும், அரங்க முருகையன், வீரசிங்கம் ஆகியோருடனும் கலந்துரையாடல் நிகழ்ந்தது. அன்பர்கள் தமிழீழத் தொடர்பாகவும், தமிழ் நாட்டு அரசியல் தொடர்பாகவும் பல ஐயப்பாடுகளையும் வினாக்களையும் எழுப்பினர். ஏறத்தாழ மூன்று மணிநேரம் பலவகையான செய்திகளைப் பற்றியும் பேச்சு நிகழ்ந்தது.

நான் வருவதற்கு முன்பே திரு. வீரமணியும் திரு. அமிர்தலிங்கமும் அங்கு வந்து சென்றிருந்தனர். அப்போது வீரமணி பிரான்சில் இருந்தார். இறுதியில் திரு. வீரசிங்கம் ஒரிரு தென்மொழி அன்பர்களைப் பற்றித் தெரிவித்த கருத்துகளாலும், அமிர்தலிங்கம் போக்குத் தொடர்பாக நான் வெளிப்படுத்திய ('தமிழ்நிலத்'தில் எழுதிய) சில மாறுபட்ட கருத்துகளாலும், இசைவான சூழ்நிலை கொஞ்சம் திரிபடைந்தது. அதுவுமன்றி, பாரீசு நிகழ்ச்சிகளின் பின்னேயே இலண்டன் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி இருந்தன. எனவே நான் மறுநாள் காலையே பாரீசு புறப்படவிருந்தேன். பாரிசிலிருந்து திரு. அரிமா வளங்கோ என்னை அழைத்துவர மகிழுந்துடன் திரு பொற்செழியன் (பாரீசு உ.த.மு.க. துணைத்தலைவர்), வளனரசு (சோசப்), இராசேந்திரன் ஆகிய மூவரையும் அனுப்பியிருந்தார். அது தொடர்பாகத் தொலைபேசியிலும் மாலையில் அவர் என்னிடம் பேசியிருந்தார். எனவே மறுநாள்(12-9-83) காலை 9 மணியளவில் திரு. வீரசிங்கம் அவர்களின் வீட்டை விட்டு, நாங்கள் நால்வரும் மகிழுந்து வழியாகப் பாரீசு புறப்பட்டோம்.

திரு. பொற்செழியன் வண்டியை மிகச் சிறப்பாகவும் அமைவாகவும் ஓட்டிக்கொண்டு வந்தார். இலண்டன் மேற்கு நகரிலிருந்து தோவர் (Dover) துறைமுகத்திற்கு வண்டியில் சென்று அங்கிருந்து சிறிய கப்பல் (Ferry)வழியாகப் பாரிசில் உள்ள கலைசு Calais) துறைமுகம் செல்ல வேண்டும். நகரிலிருந்து தோவர் துறைமுகம் 115 அயிரமாத்திரி தொலைவில் உள்ளது. என்னை அழைக்க வந்தவர்களுக்கு அவ்வளவாகப் பழகாத வழி. இலண்டன் நகரத்தை விட்டு வெளியே வருவதில் பல திருப்புச் சாலைகள். எங்களுடன் துணைக்கு ஓர் அன்பரை அனுப்பிவைப்பதாக, முன்னுள் கூறிய திரு: வீரசிங்கம் இடையில் ஏற்பட்ட உணர்வுத் திசைவால், 'அம்போ' என்று விட்டு விட்டார். இருப்பினும் செழியன் மிகக் கெட்டிக்காரர். அதுவும் அவருடன் துணைக்கு வந்த தம்பிகள் வளனரசும், அரசேந்திரனும் நகர்ப்படத்தைப் பார்த்துப் பார்த்து வழிகாட்டிக் கொண்டே வந்தனர். எப்படியோ திக்குமுக்காடி தோவர் துறைமுகம் வர பகல் 1 மணி ஆகிவிட்டது.

துறைமுக வாயிலில் எல்லைக்கடவும், பாரீசு நுழைவிசைவும் சரிபார்க்கப்பட்டன. அன்பர்களுக்கு அவர்கள் வைத்திருந்த அடையாள அட்டைகளே போதுமானவையாக இருந்தன. துறைமுகம் விளக்க முடியாத அழகு நிறைந்தது. கடற்கரையிலுள்ள மணல் முழுவதும் அகற்றப்பட்டு, காறைத் தரையாக மாற்றியிருந்தார்கள். கப்பல் ஏறுமிடத்தில் உள்ள ஆய்வுக்களரி ஒரு கண்ணாடி மாளிகை. முழுவதும் காற்றுப் பதம் வாய்ந்தது. மீண்டும் ஆய்வு நடந்தது.

அதன்பின் அங்குள்ள சிற்றுண்டிக் கடை ஒன்றில் கோதுமை வறட்டியும், பன்றிக் கறியும் சிறு அளவில் உண்டுவிட்டுக் கப்பலுக்குக் காத்திருந்தோம். அரை மணி நேரத்தில் கப்பல் வந்தது. என்ன வியப்பு! வந்த கப்பல் தண்ணீரிலிருந்து, கீழே பெரிய ஒரு காற்றுப் பையை நீள விரித்து உப்பிக்கொண்டு, கடற்கரையின் காறைத் தரையில் நீந்தி, நாங்கள் இருந்த கண்ணாடி ஆய்வுக்களரிக்கு ஏறத்தாழ 100 அடி தொலைவில் வந்து நின்றது. அறிவியல் ஆக்கத்தின் பெருவியப்பை - இறும்பூதை நிறைந்து மலைத்துப் போனேன். திருக்குறளில் உள்ள

கடலோடா [illegible]ால்வல்
நெடுந்[illegible]தர்: கடலோடும்
நாவாயும் [illegible] நிலத்து

(496)

- என்னும் குறட்பா நினைவுக்கு வந்தது திருக்குறள் கருத்தைப் பொய்யாக்கி வி[illegible] மேனாட்டு மக்கள்! கடலில் ஓடும் நாவாய் நிலத்திலும் ஓடும் பெருவியப்பைக் கண்ணாரக் கண்டு வியந்தேன்!

இனி, அதற்கு மேலும் ஒரு வியப்பு காத்திருந்தது. நாங்கள் வந்த மகிழுந்தை நேரே கப்பலின் தரைத்தளத்தில் கொண்டு போய் நிறுத்தினார் செழியன். (நம் துறைமுகங்களில் அவ்வாறெல்லாம் செய்ய இயலாது. தூக்கி (Crane) யால்தான் எடுத்துக் கப்பலுக்குள் வைக்க இயலும்.) அங்கே அதைப்போல் இருபது முப்பது மகிழுந்துகளும், பத்துப் பதினைந்து பேருந்துகளும் சரக்குந்துகளும், நிறுத்தப்பட்டிருந்தன. அதன்பின் நாங்கள் அமரவேண்டிய இரண்டாம் அடுக்குத் தளத்திற்குள் சென்றோம். மிகப் பெரிய கப்பலைச் சிறிய கப்பல் என்கிறார்களே என்று வியந்தேன். அவ்வாறானால் பெரிய கப்பல் எப்படி இருக்குமோ?

நாங்கள் இருந்த அடுக்குத் தளத்திற்கு மேலும் ஒரு தளம் இருந்தது. அதையும் சென்று பார்த்தோம். ஒவ்வோர் அடுக்குத்தளத்திலும், மிகவும் விரிந்த நடுக்கூடம்; உண்டிக் கடைகள், ஓய்வறைகள், கழிவறைகள், கழுவலறைகள் முதலியன இருந்தன. கூடத்தில் ஏராளமான மெத்திருக்கைகள் உணவு மிசைகள்! நாங்களும் சில நொறுவைகளை வாங்கி ஓர் ஓரத்தில் இருந்த ஒரு மெத்திருக்கையில் அமர்ந்து கொண்டோம்.

கப்பல் புறப்பட்டு மிக வேகமாகச் சென்றது. பாரிசில் உள்ள கலைசு (Calais) துறைமுகம் வருகையில் மணி 3, 1.30 மணிநேரத்தில் கப்பல் 35 அயிரமாத்திரியைக் கடந்து வந்தது. அரை மணி நேரம் புறப்பாட்டிலும், பாரீசு துறைமுகம் வந்து கரையொதுங்கவும் போக, ஒரு மணிநேரச் செலவு. கலைசு துறைமுகத்திலிருந்து பாரீசுக்கு மீண்டும் மகிழுந்தில் செல்ல வேண்டும். தொலைவு 250 அயிரமாத்திரி (ஏறத்தாழ 155 கற்கள்). அங்கிருந்து, செர்சியில் Cergy) உள்ள உ.த.மு க. பாரீசுக்கிளை அமைப்பாளரும், என் உயிரினிய மாணவரும் ஆகிய திரு. அரிமா வளங்கோ வீட்டிற்குப் போக 50 அ.மா. (30 கற்கள்) ஏறத்தாழ 3.30 மணிநேரத்தில் மாலை 7 மணி அளவில், காற்றினும் கடிந்து செழியன் வண்டியைச் செலுத்திக் கொண்டு வந்து சேர்த்தார்.

வழியெங்கும் அழகு! அழகு! அழகு! ஒரு துறக்க (சொர்க்க)நரகத்திற்குள் செல்வதுபோல் இருந்தது. நான் பார்த்திருந்த நாடுகளில் சிங்கப்பூரைத்தான் அழகு நகரம், அனைவரும் வாணுளில் ஒரு முறையேனும் சென்றுபார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் பாரீசு நகரம் கீழுலகத்துறக்கம்(பூலோகசொர்க்கம்) என்று சொல்வார்களே அதை நாம் பார்த்ததில்லை; ஆனால் பாரீசு அந்நகரம் போல் என் கண்முன் திகழ்ந்தது' நெடுஞ்சாலைகளில் நாங்கள் வந்த வண்டி

(தொடர்ச்சி6-ஆம் பக்கம்)

தமிழ்ப்பற்றை ஊட்டாத தமிழ்க்கல்வி

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்
உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு
சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-1 இதழ் எண் : 28 (18-12-83) பகுதி-53

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது!

ஒருமுறை தமிழீழக் கூட்டணியின் தவறான அணுகு முறையை நாம் தென்மொழியில் சுட்டியிருந்த பொழுது, அதன் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய திரு. அமிர்தலிங்கனார், நாம் ஒரு முட்டாள் என்றும், நமக்கு அந்நாட்டு அரசியலைப் பற்றி ஒன்றுந் தெரியாது என்றும், இங்கிருந்து அங்கு போய் அவரைக் கண்டு பேசிய நம் அன்பர் ஒருவரிடம் கருத்தறிவித்ததாக நமக்குச் செய்தி கிடைத்தது. அவரின் அறிவுச் செருக்கை எண்ணி, அக்கால் அதனை நாம் பொருட்படுத்தவில்லை. அதன் பின் அவருக்கே (!) தெரிந்த அந்நாட்டு அரசியல் நடவடிக்கைகளையும் அவரையும் மிகக் கூர்மையாகக் கவனித்து வந்தோம். ஏனெனில் தமிழனின் அரசியல் வரலாறு எந்த நாட்டிலும் அடிமைகளின் வரலாறுதான், அதற்கு அண்மையில் ஏதும் விடிவிருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் எந்தத் தனிப்பட்ட ஒருவரையும் அவரது கருத்துகளையும் அவ்வளவு தேவையானதாகக் கருதி நாம் திறனாய்வு செய்ய விரும்புவதில்லை. பொதுவாகவே இனநலத்துக்கு வேண்டிய மொத்தமான-தொகுப்பான-கருத்துகளைப் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியுமே நமக்கு என்றும் கவலை. ஆனாலும் ஒட்டுமொத்தமான ஓர் இனநல உணர்வு, தனி ஒருவரால் அதுவும் அவரைச் சார்ந்த சில விளைவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நோத்தில், சிதைந்து கெட்டுப் போகிறதே என்று நினைக்கையில் அஃது அமிர்தலிங்கமானாலும் அல்லது இந்திரா காந்தியானாலும் நாம் பெரிதாகக் கருதியதில்லை.

தமிழீழச் சிக்கல் தனிப்பட்ட ஓர் அமிர்தலிங்கத்துக்கோ அல்லது தமிழீழ விடுதலைக் கூட்டணிக்கோ மட்டுமே உரியதன்று. தமிழினத்துக்கே உரித்தான சிக்கல் அது. திரு. அமிர்தலிங்கம் எப்படி, தமிழ் நாட்டில் இருந்து கொண்டு, தமிழீழச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் உரிமையை எவரும் தாராமல் அவரே எடுத்துக் கொண்டாரோ, அப்படியே தமிழன் ஒவ்வொருவனும் தமிழீழத்தைப் பற்றிப் பேசவும். தமிழீழத் தலைவர்களைப் பற்றித் திறனாயவும் உரிமை உடையவனே! எனவே, சில கருத்துகளை, இன்றைய காலத் தேவையை உணர்ந்து மக்கள் முன் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

திரு. அமிர்தலிங்கமும் அவர் தம் கூட்டணியினரும் தெரிந்தோ தெரியாமலோ, தமிழீழ விடுதலையைப் படிப்படியாகக் கை நெகிழ்த்து விட்டனர். ஒரேயடியாக அப்படிச் செய்தால் மக்களின் (தமிழீழ மக்கள் மட்டும் அல்லர்: தமிழ் நாட்டு மக்களையும் சேர்த்தே கூறுகிறோம்) ஒட்டுமொத்தமான வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் ஆளாக வேண்டிவருமே என்று, விரல் விரலாகத் திறந்து, இறுதியில் கையை ஒரேயடியாக விரித்து ஒன்றுமில்லை என்று காட்டி விட்டினர். இனி தமிழீழ முயற்சி அணைந்து போன கொள்ளிக் கட்டைதான். இனிமேல் எவராகிலும் வந்து மீண்டும் பற்றவைத்தால்தான் உண்டு.

மொத்தத்தில் கூறுவதானால், தம் உடனுள்ள கூட்டணி உறுப்பினர்களையும் தனித்தனியாக வலுக்குறையச் செய்து, தம் தனிப்பட்ட விளம்பரத்துக்கும் நலத்துக்குமாக, கருவாகி, உருவாகித் திருவாகி வந்த இலங்கைத் தமிழீழ விடுதலைக் கொள்கையைச் சிங்கள வெறியர் செயவர்த்தனாவிடமும், தமிழினப் பகைவர் இந்திரா காந்தியம்மையாரிடமும் அடகுவைத்து விட்டார். இதனால் அவருக்கு இழப்பில்லை; தமிழினத்துக்கே இழப்பு!

இங்கு ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். பார்ப்பனர்கள் நடத்தும் செய்தித்தாள்கள் ஒரு கருத்துக்கும் ஒரு தமிழர் தலைவர்க்கும் மிகுதியான விளம்பரங்கள் கொடுக்கின்றன என்றால், அக்கருத்து தமிழர் நலனுக்கு மாறுபட்டதும், தமிழினத்தையும் தமிழையும், அழித்தொழிக்கும் முயற்சிக்கு ஊக்கமளிப்பதும் ஆகும் என்பதையும், அத்தகைய தலைவருடைய போக்குத் தங்களுக்குச் சார்பானதும், அனைத்துத் தமிழரின் நலனுக்கும் மாறானதும் ஆகும் என்பதையும், உண்மைத் தமிழர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். திரு அமிர்தலிங்கத்திற்குக் கடந்த சூலை மாதத்திற்குப் பின் கிடைத்த உலக விளம்பரம் இதுநாள் வரை அவர் பெற்றிராததும், பெறுகின்றவாறு கனவிலும் காணாததுமான விளம்பரமாகும். அவருக்கு மனச்சான்று என்று ஒன்றிருந்தால் அஃது அவருக்கே தெரியும்.

இனி, நிலை இவ்வாறிருந்தும், தமிழகத்தில் உள்ள தமிழர் தலைவர்களில் சிலரும் ஏன் அவரைக் கொண்டாடுகிறார்கள் என்றால், அதுதான் தமிழின வரலாற்றின் மெலிவான தன்மையாகும். இப்பொழுதுள்ள தமிழினத் தலைவர்களுள் பலர் இந்திரா காந்திக்கு எதிரான கொள்கையை வெளிப்படையாகச் சொல்ல முடியாதவர்களாக இருப்பவர்கள். அந்த அளவுக்கு அவர்களிடம் பள்ளங்கள் படுகுழிகள் உண்டு. எனவே இந்திரா காந்தி வெளிப்படையாகவும், செயவர்த்தனே மறைமுகமாகவும் ஆதரிக்கும் திரு அமிர்தலிங்கனாரின் அரசியல் கவட நாடகத்தை. இவர்கள் எதிர்க்க இயலாது. மாறாக, அவர்கருத்துக்கு ஆதரவு தராமலோ, அல்லது தருவதுபோல் நடிக்காமலோ இருந்து விட முடியாது.

இனி, திரு. அமிர்தலிங்கத்தின் தனிப்பட்ட நடைமுறை இதில் என்னவுண்டு; கூட்டணித் தலைவர்கள் அனைவருமே வாய்திறவா மூங்கைகளா, என்று எவரும் வியப்படையத் தேவையில்லை. சூலைமாதக் கலவரத்தின் தாக்கத்தாலும். இனிமேல் அவர்கள் இலங்கைக்குப்போய் மூச்சுப்பிடித்து வாழவேண்டிய நோக்கத்தாலும் திரு அமிர்தலிங்கத்தின் நிழலைப் பற்றினால் தவிர, அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆனைப்பட்ட 'விடுதலை'ப் பாவலர்களுக்கும், 'சுதந்திர' வீரர்களுக்குமே அந்த நிலைகள் என்றால் பிறரைப்பற்றிக் கருத்துச் சொல்ல என்ன இருக்கிறது. இவர்களின் நிலைகளுக்குத் தொண்டைமான் நிலை எவ்வளவோ தாழ்வில்லை.

எப்படியோ, கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி விட்டது. அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகி, அதுவும் தேய்ந்து ஒன்றுமில்லாமற் போகும் நாள் என்றோ, தெரியவில்லை. விடுதலைப் புலிகளுக்கே வெளிச்சம் 0

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?-2

உண்மையான பொதுத் தொண்டு செய்பவர்களுக்கு அல்லது குடிமக்களின் நன்மைகளுக்காகப் பாடுபடுபவர்களுக்கு எப்பொழுதுமே பல பெருமைகள் வாய்ப்பது உண்டு. பொது மதிப்பு, நிலைத்த புகழ், நல்ல பெயர், பொருள் வருவாய் ஆகியவை அவர்களுக்குப் பரிசுகளாக அவர்கள் விரும்பாமலேயே தாமாகவே வந்து சேரும். இவற்றைப் புறத்தே இருந்து பார்ப்பவர்கள், தாமும் அவர்களைப் போல் பொதுத் தொண்டு செய்து, அத்தகைய பெருமைகளை எய்த வேண்டும் என்று ஆவலுறுவர். அதனால் சில போலித் தொண்டர்கள் உருவாக வாய்ப்புகள் ஏற்படும். அவர்களை இனி, விளக்கப் பெறும் செய்திகளைக் கொண்டு அடையாளம் கண்டு கொள்ளலாம்.

இனி, மேலே கூறிய பெருமைகளுடன் பதவிகளும் அதிகாரங்களும் வருவதாகச் சிலர் நம்புவர். ஆனால் அவை பொதுத் தொண்டால் வருபவை அல்ல. அவை வருவதால் பொதுவுணர்வு கெடும் எனவே, அவற்றை உண்மையான குடிநலம் பேண விரும்புவார் தவிர்க்கவே செய்வர். இக்காலத்தில் குடிநலம் பேண விரும்பும் பொதுத் தொண்டுக்கும், அரசியல் தொண்டுக்கும் வேறுபாடுகள் தெரிவதில்லை.

பொதுத் தொண்டால் வருவது நிலைத்த புகழ் ; அரசியல் தொண்டால் வருவது தற்காலிக விளம்பரம் விளம்பரம் புகழாகாது அது போலவே பொது மதிப்பு என்பதும் தமே வருவது. இது குடிநலம் பேணுபவர்களுக்கே ஏற்படுவது. ஆனால் அரசியல் தொண்டர்கள் இந்தப் பொது மதிப்பையும் தாமே பணம் கொடுத்து விலைக்கு வாங்கி விடுவார்கள்.

நமக்குத் தெரிந்த ஓர் உண்மையை இவ்விடத்தில் கூறுவது தவறாகாது என்று நினைக்கின்றோம். கடந்த காலத்தில் காலஞ் சென்ற ஓர் அரசியல் தலைவர், தம்மை மக்கள் எல்லாரும் நன்கு மதித்து வரவேற்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற பெரு விளம்பர விருப்பத்தால், தாம் தொடர் வண்டியிலும் உந்து வண்டியிலும் செல்ல நேர்ந்த பொழுதெல்லாம், ஊருக்கு ஊர் அவ்வண்டிகள் நிற்கும் நிலையங்கள் தோறும், தம் கட்சி ஆட்களுக்கு முன்கூட்டியே செய்தியும் பணமும் கொடுத்தனுப்பி, அப்பணத்தைக் கொண்டு ஒவ்வொரு நிலையத்திலும் தமக்கு மாலைகளும், ஆடைகளும் வாங்கி அணிவித்துத் தம் பெயர் கூறி 'வாழ்க! வாழ்க!' என்று கூப்பாடு போட வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்து கொள்வார். அவற்றுக்காக அவர் ஒவ்வொரு முறையும் ஏராளமாகப் பணத்தைச் செலவிட்டார். இதுதான் மக்கள் தொண்டு பேணுபவர்க்கும் அரசியல் தொண்டு செய்பவர்களுக்குமான தலையாய வேறுபாடு ஆகும். தந்தை பெரியார்க்கும் தலைவர் காமராசர்க்கும், இக்கால் உள்ள தலைவர்கள் ஓரிருவர்க்கும் இப் பொது மதிப்பு இயல்பாகவே இருந்தது; இருக்கிறது. ஆனால் பலர் இதைச் செயற்கையாகவே உருவாக்கிக் கொள்கிறார்கள்.

இனி, பெருமைகளும், பொருள் வருவாயும் கூட அப்படித்தாம். இக்கால் உள்ள தலைவர்கள் சிலர், பொது நிகழ்ச்சிகளின் பொழுது, மக்கள் தமக்கு அன்பளிப்புகளை வழங்க வேண்டும் என்பதற்காக, முன்கூட்டியே தமக்கு இசைவான தொண்டர்கள் சிலரிடம், பத்தும் ஐந்துமாகக் கொடுத்து, அவ்வுருபாக்களை எல்லார் முன்னிலையிலும், தமக்கு அன்பளிப்பாகக் கொடுக்கும்படி செய்து, அவர்களைப் பார்த்துப் பொதுமக்களில் சிலர் தாமும் அவ்வாறே தம்மிடமுள்ள ஒன்றிரண்டு மாறா உருபாக்களை அன்பளிப்பாகப் போட்டி போட்டுக் கொண்டு தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். (போலி உணர்வுகளும் பொய்யாசைகளும் மிகுந்து விட்ட இக்காலத்தில் திருமண பரிசளிப்பு நிகழ்ச்சிகளிலும் கூட, இது போலும் முறைகள் ஒரு சிலரால் கடைப்பிடிக்கப் படுவனவாகத் தெரிய வருகின்றன.) இந்நிலை பொதுமக்கள் தொண்டுணர்வும் அரசியல் தொண்டுணர்வும் இரண்டறக் கலந்து விட்ட கொடுமையைக் காட்டுகிறது. பொதுமக்களும் இவற்றின் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ள முடியாத அறியாமையும் அடிமையுணர்வும் கொண்டவர்களாக இருப்பது, இப்படியான தலைவர்களுக்கு நல்ல வாய்ப்பாகப் போய் விடுகிறது.

மொத்தத்தில், குடிநலம் கருதுபவர்களுக்கு இருக்கும் பொதுவுணர்வுக்கும், அரசியல் நலம் கருதுபவர்களுக்கிருக்கும் பொதுவுணர்வுக்கும் தலையாய வேற்றுமைகள் உண்டு. குடிநலம் பேணுபவர்களுக்கு உள்ள பொதுவுணர்வு தந்நலமற்றது; விளம்பரம் இல்லாதது; உண்மையானது; ஊதியம் கருதாதது; இன்ப நாட்டம் இல்லாதது; சூழ்ச்சியற்றது! அரசியல் நலம் கருதுபவர்களுக்கு உள்ள பொதுவுணர்வு தந்நலமுள்ளது; விளம்பர நோக்கம் உள்ளது; போலியானது; ஊதியமே கருதுவது; இன்ப நாட்டம் கொண்டது; சூழ்ச்சியானது!

இனி, இக்கட்டுரையில் விளக்க வேண்டிய கருத்தாக நாம் எடுத்துக் கொண்ட இனநல முன்னேற்றத்துக்கு நாம் வருவோம்.

நம் அரும் பெரும் தமிழும் தமிழினமும், ஆரியர்கள் தென்னாட்டுக்கு வந்து படிப்படியாக அவர்கள் வல்லாண்மையை ஏற்படுத்திக் கொண்ட காலத்திலேயே சிதையத் தொடங்கி விட்டன. அக்காலம் ஏறத்தாழ இன்றைக்கு 2500 அல்லது 3000 ஆண்டுக்கு முன் உள்ளதாகும். அவர்கள் வந்த தொடக்கக் காலத்தில், இங்கிருந்த தமிழர்களிடம், ஓர் அயலவன் தொடக்கத்தில் எவ்வாறு உதவி வேண்டி, அமைவும் அடக்கமும், இணக்கவுணர்வுடனும் இருப்பானோ, அவ்வாறு இருந்து, எந்தவகையான சூழ்ச்சியையும், ஏமாற்றையும் கை காட்டாமல் வாழ்ந்து வந்ததாகத் தெரிய வருகிறது. வெளிநாடுகளுக்குப் போய் வாழவேண்டியவர்கள் முதலில் எவ்வாறு அவ்வந் நாடுகளில் உள்ளவர்களுக்கு இசைவாக மொழி நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் இருந்து, பின் படிப்படியாகப் பதவி நிலைகளிலும் அதிகார நிலையிலும் அமர்ந்து, அதன் பின் அரசியலையும், பொருளியலையும், கைப் பற்றிக் கொண்டு,

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

தமிழர்க்குத் தீங்கு செய்யும்!

பெரியார் தனிப்பட்ட ஒருவருக்கோ, ஓரியக்கத்துக்கோ மட்டும் சொந்தம் இல்லை!

தமிழினத்துக்கே சொந்தமானவர்!

திருவள்ளுவர் ஒருவர்! சேக்சுபியர் ஒருவர்! மார்க்சு ஒருவர்! இலெனின் ஒருவர்! அப்படிப் பெரியாரும் ஒருவரே!

பிரான்சு பெரியார் விழாவில் பாவலரேறு பேருரை! தொடர்ச்சி-3

தங்களுடைய நாடோடி மொழியாகிய வேத மொழியை அன்றைக்குப் புதுமைப் படுத்த வேண்டும்; அதை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்பதற்காக பாலி, பிராகிருதத்தைக் கலந்து சமசுக்கிருதமாக்கினர். — சம் என்றால் இணைப்பது; கிருதம் என்றால் செய்யப்பட்டது என்று பொருளாகும் கிருதம் என்ற சொல்லுக்குக் கரு என்ற தமிழ்ச்சொல் வேர்ச்சொல். இஃது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம், ஏதோ திரைப்படம் காட்டுவது போல்! இந்தக் 'கரு' என்ற சொல் சமசுக்கிருதத்திலே "கிருஷ்" என்று திரியும். கண்ணன் என்ற சொல் கிருசுணன் என்று ஆகும்! கண்ணன் என்றால் கருப்பு!

'ப' என்பதைச் சமசுக்கிருதத்தில் 'பிர' என்பர். நாம் பவழம் என்று சொல்வோம்; அவன் "பிரவாளம்" என்று சொல்வான்! நாம் தமிழம் என்று சொன்னோம்; அவன் திரமிளம் என்று சொன்னான். எனவேதான் நாம் திரமிளம், திரவிடம் போன்ற சொற்களைத் தவிர்க்க வேண்டும். ஏன்? அஃது அவன் சொல்! தமிழம் என்பதுதான் தமிழர்களுக்கு! அம் என்ற விகுதி வைத்துச் சொல்வது தமிழர் வழக்கம். மலையாளம், தெலுங்கம், கன்னடம், துளுவம், ஆங்கிலம், உருசியம் . . . என்று சொன்னோம். இதைத்தான் அவன் திரமிளம் என்று சொன்னான். இது வேதகாலத்திலேயே வழங்கத் தொடங்கி விட்டது.

இப்படிப்பட்ட சமசுக்கிருதத்தைத் தான் தேவ மொழி என்று சொல்லி ஏமாற்றினான். தமிழன் ஆரியனைக் கேட்டான் : "எங்கிருந்து வருகிறாய்?" என்று! "மேலிருந்து வருகிறேன்" என்றான். 'இருக்கும்; பார்த்தால் சிவப்பாக இருக்கிறீர்கள்; நாங்கள் எல்லாரும் கருப்பாக உள்ளோம்' என்றான்!

தமிழன் பண்பாட்டில் சிறந்தவன்; எனவே வந்தவர்களை வாருங்கள் என்றழைத்து - தனது உடைமைகளை அவர்களுக்குத் தந்தான். உணவைக் காலத்திற்கும் ஆக்கிப் போட்டான். அத்தகைய கொடைமடச் செய்கைகளுக்குப் பிற்கால தமிழ் அரசர்களின் வரலாறுகளில் சான்றுகள் இருக்கின்றன வேறு எந்த இனமும் இவ்வளவு அன்புள்ளத்தால் ஏமாறிய இனமில்லை. இந்த நிலைகளையெல்லாம் ஒருவாறு உங்களுக்குச் சொல்லிவிட்டு - ஒரேவோர் உண்மையை மட்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இன்றைக்குப் பெரியாருக்கு விழா எடுக்கின்றோம் என்று சொன்னால் எல்லாரும் எடுக்கிறார்களே அதைப் போலில்லை. அவர் இல்லையென்றால் நீங்களெல்லாரும் இங்கே வந்து உட்கார்ந்திருக்க முடியாது; நாங்களெல்லாரும் இங்கே வந்து பேசமுடியாது... என்ன செய்தார்? தந்தை! எல்லாருக்கும் தான் தந்தை! எங்கேயாவது நாம் ஒரு தந்தையைப் பொதுத் தந்தையாக ஏற்றுக் கொள்கிறோமா? நம் எல்லாருக்கும் ஆளுக்கொரு தந்தை இருக்கிறார்! மதத்தில் கூட தந்தை - "Father" - என்று சொல்கிறோம்.

ஆனால், இனத்திற்கே ஒரு தந்தையாக இருந்து - ஒரு தந்தை செய்ய வேண்டிய வினையை - கடமையைச் செய்தவர்! பெரிய ஆற்றல் வாய்ந்த மாந்தர்! அன்றைய திருக்குறளிலே குறிக்கப்பெற்ற 'செயற்கரிய செய்வார் பெரியர்'' என்ற சொல்லுக்கு ஈராயிரம் ஆண்டுகளாக யாரும் இலக்கியமாக அமையவில்லை. அப்படியானால் இவர் என்ன செய்தார்? அதே திருக்குறளிலே சொல்லுகிறது. தந்தை என்றால் ஒரு கடமை இருக்கின்றது. என்ன கடமை?

> 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்''

இனத்திலே பின்னால் தங்கி விட்ட மகனை - தமிழனை - கல்வி கேள்விகளால் சிறந்தவனாக்கி முன்னேற்றி உட்கார வைப்பதுதான் ஒரு தந்தையுடைய கடமை. என்ன அழகாகச் சொல்கிறார்? ஏன்? பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் (மனு தருமப்படி!) விட்டு விடாதீர்கள்! ஆரியன் இந்த நாட்டிற்குள்ளே புகுந்து விட்டான்! சூத்திரருக்குப் படிப்பு தேவையில்லை - கூடாது என்று சொல்கின்றான். அதனாலே பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் இருந்து விடாதீர்கள்! என்றெல்லாம் திருக்குறளிலே குறிப்பிடப்படுகிறது!

உங்களுக்குத் திருக்குறளை மட்டும் சொல்வதற்கு அதைப் பிட்டுப் பிட்டுக் காட்டுவதற்கு ஓராண்டு வேண்டும். அவ்வளவு வரலாறுகள் அடங்கியுள்ளன. அதை என்ன என்று சொல்லி விட்டான் - தருமம்! தருமம் என்று சொன்னவுடனே நமக்குக் கண்ணெல்லாம் தெரியாமல் போய் விட்டது. "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" முதல் "ஆறுவது 'சினம்" வரைதான் தருமம் என்று நினைக்கக்கூடாது. "பொய் சொல்லக் கூடாது; ஒழுக்கமாக இருக்க வேண்டும்; திருடக் கூடாது; பிறர் மனைவியை நயக்கக் கூடாது" - இது தருமம்! அப்படி மாற்றி எழுதி வரலாற்றையே நமக்குப் பெரிய தருமமாகச் சொல்லி - தருமத்தை ஆராயக் கூடாது என்று சொல்லி விட்டான்! என்ன தருமம்? மனுதருமம்! எதையும் ஆராயும் திறமை இல்லையே! நாம் என்ன படித்து என்ன பயன்?

எனவேதான், ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதிய அந்த உயர்ந்த மெய்மம், தத்துவம் பிறந்தது. ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற அந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகப் பிறந்தவரே தந்தை பெரியார் ஆவார்! வாழ்க்கை முழுவதும் நமக்காக உழைத்தவர். யாரும் அப்படி உழைக்க முடியாது! எந்தத் தலைவரும் அப்படி உழைத்ததில்லை! அன்றைக்கும் இல்லை; இன்றைக்கும் இல்லை; இனி என்றைக்கும் யாரும் வரப்போவதுமில்லை.

ஒரே பெரியார்தான்! ஒரே திருவள்ளுவர்; ஒரே சேக்சுபியர்! ஒரே காரல் மார்க்சு! ஒரே இலெனின்! அப்படித்தான் உலகத்திலே அறிஞர்கள் இருப்பார்கள்! அடுத்த இலெனின் என்று எவரும் சொல்ல முடியாது! இவர் அடுத்த திருவள்ளுவருங்க என்று எவரும் சொல்ல முடியாது. இவர் அடுத்த காரல் மார்க்சுங்க என்று பேசியிருக்க முடியாது!

தன் செயலை (அதன் பயனையன்று) தனக்கென்று எவனொருவன் உரிமையாக்கிக்கொள்கின்றானோ அவன் தான் உலகத்திலே தனிமையாக நிற்கின்ற பேரறிஞன்! பெருந்தலைவன்!

அழகாகச் சொல்லுவார்; அப்படி எல்லாரையும் உருவாக்கி விட்டு விடுங்கள் என்று திருவள்ளுவர் சொல்லுவார். மகன் பிறக்கிறான் எதற்கு? "இல்லைங்க! நான் முதுமை அடைந்து விட்டால் எனக்குச் சம்பாதித்துப் போட ஓர் ஆள் வேண்டுமல்லவா? அதற்குத் தான் பையன் பிறந்திருக்கிறான்" என்று சொல்லுவான் தந்தை. திருவள்ளுவர் சொல்லுவார் : "அட மடப்பயலே! உன்னுடைய மகனை உனக்கும் உன் மனைவிக்கும் சம்பாதித்துப் போடுவதற்காக - உனக்கு உரிமையாக வளர்க்காதே! இந்த உலகத்திற்காக வளர்த்துவிடு! மக்களுக்காக வளர்த்துவிடு!" என்பார்! இந்தக் காலத்தில் ஒரு தந்தை என்ன கேட்பான் : "அவனைப் படிக்க வைப்பது எதற்குங்க? பொறியாளர் ஆகவோ -மருத்துவராகவோ ஆவதற்காகத்தானே! அப்போது தானே எங்களுக்குச் சம்பாதித்துப் போடுவான் என்றுதானே - முதுமையிலே எங்களைக் காப்பாற்றுவதற்காகத் தானே மகனைப் பெறுகிறோம்? என்றுதான் விடை தருவான்! "இப்படியெல்லாம் தத்துவம் பேசாதே! மூடனே! இந்த இனமானது வாழ்ந்தால் அதில் நீயும் வாழ்வாய்! இனம் வீழ்ந்து விட்டது. இந்த இன வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் உழைக்க வேண்டும். தமிழனுக்குப் பிறக்கும் ஒவ்வொரு மகனும் உழைக்க வேண்டும்." என்கின்ற குறிப்பைத் திருவள்ளுவர் தாம் கொடுத்தார்! (பெரியார் திருவுருவச் சிலையைக் காட்டி) அந்த - பெரிய - அரும்பணியை இவர் தொடங்கி வைத்தார். நாங்களெல்லாம் அவர் பிள்ளைகள்; நீங்கள் எல்லாம் பெயரன்மார்கள். எல்லாரும் சேர்ந்து இந்த இனத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும்! என்ன சொல்கிறார் திருவள்ளுவர்;

> "தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க்கு எல்லாம் இனிது"

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை" தன்னை விடத் தன் மக்களுடைய அறிவு நலன், அறிவுடைமை- அவர்கள் அறிவாளிகளாக வேண்டிய கடமை என்ன தெரியுமா? "மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது" - எப்படிப்பட்ட சிந்தனை! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு பொதுச் சிந்தனை!

இந்திரா காந்தியின் நேரடிப் பார்வையில் இயங்கும் ஒற்றுத்துறை!

இதன் பெயர்,
RAW - Research and Analysis Wing.
இதன் தலைவர் : காவ்.
— இவ் வொற்றுத் துறை மிகவும் கமுக்கமாகச் செயல் படக் கூடியது. கன்னியாகுமரி முதல் இமயமலை வரை உள்ள அனைத்துச் செய்திகளையும் உடனுக்குடன் இந்திரா காந்திக்குத் தெரிவிக்கக் கூடியது. இஃது இந்திரா காந்தி தலைமையமைச்சரான உடன ஏற்படுத்தப் பட்டது.

சிறிலங்காப் படையின் வலிவு!

(1) படையில் உள்ள மொத்த வீரர்கள். - 9768 பேர்.
(2) Voluntery Troop : (விருப்ப உதவிப் படையினர். 12000 பேர். இவர்களில் 4000 பேரே போர்க் கருவி தாங்கியவர்கள்.
(3) உருசியா, சீனா, பிரிட்டன், மேற்கு செருமனி, யுகோசுலாவியா ஆகிய பல நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட படைக் கருவிகளின் அளவும் கொஞ்சமே.
(4) வான் படையினர் : 2270 பேர்.
(5) போர் வானூர்திகள் : 8. (இவற்றில் ஒன்று கூட பறக்கும் நிலையில் இல்லை.)
(6) கடற் படையினர் : 2887 பேர். (இவர்கள் கள்ளத் தோணிக்காரர்களைப் பிடிக்கவும், கடத்தல் படகுகளைப் பிடிக்கவுமே பயன்படக் கூடியவர்கள்.)
• இந்தியா நினைத்தால் போர்த்துக்கீசியரிடமிருந்து கோவாவைக் கைப்பற்றியது போல் தமிழர் பகுதியை மிக எளிதில் விடுவிக்க முடியும்

நன்றி. — தினமணிக்கதிர். 4-9-'83

தமிழரெல்லாம் தமிழ் என்னும் ஒரு கூட்டுக்குள்

பெரியார் போல் புரட்சியாளர் - சிந்தனையாளர் - இனத்தலைவர் - இதுவரை இருந்ததே இல்லை!

எதிலே? "கல்வியிலே!". எங்கேயாவது நடந்திருக் கிறதா — பொதுவுடைமையிலே பொதுச் சிந்தனை தோன்றியிருக்கும் உலகத்திலே, அரசியல் நிலையிலே கூடப் பொது' என்று சொன்னவன் தமிழன்! ஏன்? அந்த அறிவை இழந்து கொண்டிருந்த நேரம் அந்த நேரம்! இவ்வளவு பெரிய அறிவு தோன்றிய இனம் தமிழினம்!

திருக்குறளைப் பற்றி ஆல்பிரட் சுவைட்சர் சொல்லுகிற போது - "இந்த நூல் இன்ன பெருமை வாய்ந்தது; இந்த நூலை எழுதிய ஆசிரியன் இன்ன பெருமை வாய்ந்தவன் - இப்படிப்பட்ட பெரிய பெரும் பேராசிரியன் ஓர் இனத்திலே தோன்ற வேண்டுமானால் அந்த இனம் மிக நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னே தோன்றி மிகக் கூர்தலற வளர்ச்சியுற்று (பரிணாமம் அடைந்து - படிநிலை வளர்ச்சியுற்று) - அறிவு நிலையிலே அதனுடைய உயர்ந்த அணுக்கள் மலர்ந்திருக்க வேண்டும்; அப்பொழுதுதான் ஓர் அறிஞன் அப்படித் தோன்ற முடியும்" என்கிறார் ஆல்பிரட் சுவைட்சர்.

தேற்றமாகக் கூறிய அந்தத் திருக்குறள் கருத்துகளை நடைமுறையில் மக்களுக்கு - இனநலம் என்கின்ற நிலையிலே - "இனநலம்" என்கின்ற சொல் இலக்கியத்திலே திருக்குறளைத் தவிர வேறு எங்கேயும் பார்க்க முடியாது - நீங்கள் நான் ஏதோ 'அது' இதைப் படித்து விட்டுப் பேசுவதாக நினைத்துக் கொள்ளக் கூடாது - எல்லா இலக்கியங்களையும் சந்து சந்தாக - பொந்து பொந்தாகப் பார்த்தாகி விட்டது. எல்லாத் தமிழிலக்கியங்களையும், சமய இலக்கியம், குமுகாய இலக்கியம், மொழி இலக்கியம், இலக்கணம் . . . எங்கெங்கு நாம் தாழ்ந்து விட்டோம் என்று பார்த்தாயிற்று! எந்த இடத்திலேயும் "இன நலம்" என்ற சொல்லே இருக்காது; அதே போல, "குடிசெயல் வகை" என்ற சொல்லும் இருக்காது.

குடிசெயல் வகை என்றால் இனத்தை முன்னேற்றுவது! அழகாகச் சொல்வார்கள் ஐயா (பெரியார்) - தந்தை! நம்ம தந்தை! எனக்கொரு தந்தை - உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே தந்தை உலகத்திலே இவர் (பெரியார்) தான்! தந்தையாக மட்டுமிருந்தால் போதாது! தந்தையாக மட்டும் இருந்தால் சோறு போடுவார்; படிக்க வைப்பார்! ஆனால் இவர் (பெரியார்) வெறும் தந்தையாக மட்டும் அல்ல! நமக்கு வழிகாட்டி மட்டும் அன்று! ஆசிரியன் மட்டுமன்று! நம்முடைய இனத்திற்கு மூலமானவர்! பெரியார் என்று சொன்னால் மீதிப் பேரெல்லாம் சிறியார் என்றுதான் பொருள்! இவர் ஒருவர் தான் பெரியார் என்றால் மீதிப் பேரெல்லாம் சிறியார் தாம்! "என்னங்க! (பெரியார்) அவர் அப்படிச் சொல்கிறாரே (கடுமையாகத் தாக்குகிறாரே)?" என்றால் உண்மையாக இருக்கும். சில நிலைகளில் அவரே (பெரியாரே) சொல்லுவார், நான் சொல்லுவது சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்; சரியில்லை என்று பட்டால் விட்டு விடு! ஏன் கவலைப் படுகிறாய்?" என்பார்.

"ஐய ! நீங்கள் இந்த இந்து சமயத்தை - இந்தப் பார்ப்பனியத்தை ஒழிக்கப் பாடுபடுகின்றீர்களே! இது நடக்குமா? உங்களைப் போல எத்தனையோ பேரெல்லாம் வந்து பிறந்து நடந்து பார்த்தாங்களே! முடியவில்லையே!' என்று சொன்ன பொழுது - பெரியார் அவர்கள் - "ஆமாம்! அஃது ஓர் பெரிய இமயமலையை நகர்த்துகிற செயல் என்று எனக்குத் தெரியும்! பார்ப்பனியம் என்பது இமயமலையைப் போன்றது என்பது எனக்குத் தெரியும்! அந்த இமய மலையை நகர்த்துகின்ற முயற்சியிலே - நான் செய்கின்ற முயற்சி - என்னுடைய வாழ்க்கை - என்பது ஒரு மயிரைப் போன்றது; இந்த மயிரைக் கட்டி அந்த மலையை (இந்து மதம் - பார்ப்பனியம் என்னும் இமயமலையை) இழுத்துவிட நான் முயற்சி செய்கின்றேன் : செய்தாக வேண்டும்! அது கடமை! ஆனால், அந்த மலையை இழுக்கின்ற முயற்சியிலே மலை நகர்ந்தால் நல்லது; மயிர் அறுந்துபோனால் போகட்டும்! என்ன இழப்பு எனக்கு?" என்று சொன்னார்கள்.

அவ்வளவு உறுதி! அந்தக் கொள்கையிலே அவ்வளவு நேர்மை! "பதவி தேவையில்லை! மக்களுக்கு உழைப்பதுதான் எனக்குப் பதவி! அதுதான் இன்பம்! அதுதான் எனக்கு வாழ்க்கை அதுதான் நான்!" என்று துணிந்து நின்ற ஒரே ஒரு தலைவன் பெரியார்! இனத்தலைவன் பெரியார்! அதற்குமுன் யாரும் இனத் தலைவர்களே கிடையாது. எங்கே இருக்கிறார்கள் சொல்லுங்கள்; பார்ப்போம்! தமிழினத்திற்கு எங்கே யாவது தலைவன் இருந்தானா? உண்மையான தலைவன் எவனுமே கிடையாது. யாரை வேண்டுமானாலும் வைத்துப் பார்க்கலாம்; இணை வராது! இப்படிப்பட்ட ஒரு பெரிய புரட்சியாளர் - பெரிய சிந்தனையாளர் - பெரிய இனத்தலைவன் இதுவரை இருந்ததே இல்லை! இந்த இனத்திற்கு விடுதலை தேடித்தர துடித்தவன், இறுதிவரை . . . கடைசிவரை! நம்மைப்போல உடல் நலத்தோடு இருந்தபோது குதித்த குதி மட்டும் அன்று! உடல்நலம் கெட்டு - இரவு-பகல், பனி - மழை - வெயில் என்று எதுவும் பாராமல் - மேடு - பள்ளம் என்று எல்லாவற்றிலும் கால்வைத்து - சிற்றூர் - பேரூர் எந்த ஊராயினும் நடந்து போய் - இரவு - பகல் கண் விழித்திருந்து - விழிப்பாக இருந்து - இந்த ஆரிய இனம் தமிழினத்திற்குச் செய்த கொடுமைகளை அம்பலப்படுத்தி - மக்களுக்குச் சொல்லி — தன்னுடைய உயிர், உடல் வற்ற வற்ற - தொண்டை, நா வற்ற வற்ற நோய் வாய்ப்பட்டு - நடக்க முடியாமல் - கடைசி நேரத்திலுங்கூட மேடைக்கு வரும்போது நான்குபேர் கைத்தாங்கலாகக் கொண்டு வந்து விடும்போது, "ஐயோ, அம்மா! அம்மா! அம்மா! அம்மா! . . . .' என்று சொல்லிக் கொண்டு, - மேடைக்கு வந்து நாற்காலியில் அமர்ந்து பேசத் தொடங்கினால் . . . சங்கம்தான்!

அதுவரை அந்த உடலால் தாள முடியவில்லை. நாமாக இருந்தால் — பெரிய அளவுக்குச் செல்வம் படைத்தவர்களாக நாம் இருக்கின்ற நிலையிலே செய்வோமா? அவர்களுக்குச் (பெரியாருக்குச்) செல்வமாயில்லை! படுத்துக் கொண்டு கூட அவ்வளவு நன்மைகளைப்பற்றி இறுதிவரை பேசிக்கொண்டிருந்தார்! பெருந்தன்மை. உண்மையான பெரியவர்! யாரும் உழைக்கவில்லை! இனியாரும் உழைக்க முடியாது' அந்த அளவிற்கு இந்த இனத்திற்கு ஒரு பெரிய கலங்கரை விளக்கமாக என்றென்றும் நின்று கொண்டிருக்கின்ற ஒளி! அதனால்தான் திருவள்ளுவர் சொன்னார் "நின்றஒளி" என்று சொல்லுவார். எங்கேயாவது அறிவை ஒளி என்று சொல்லியிருக்கிறதா? எந்த மொழியிலாவது?

(தொடரும்)

இலங்கை-சிறிமாவோ-சாத்திரி-[illegible]!

1964-இல் இலங்கையில் உள்ள தமிழர்களில் 9,75,000 பேர் நாடற்றவர்கள் என்று மதிப்பிடப் பெற்றார்கள்.

இச்சிக்கலுக்குத் தீர்வுகாண 1965 - ஆண்டு அப்பொழுது இலங்கைத் தலைமையமைச்சராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயகாவும், இந்தியத் தலைமையமைச்சராகவிருந்த இலால் பகதூர் சாத்திரியும், அம்மக்களை ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருநாட்டின் குடிமக்களாகவும் ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்தார்கள்.

அவ்வொப்பந்தப்படி 7 பேரை இந்தியாகுடிமக்களாக ஏற்றுக்கொண்டால், 4 பேரை இலங்கையரசு தன் நாட்டுக் குடிமக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவானது.

நயமைப்படி இவ்வொப்பந்தமே முறையற்றது. அனைத்துத் தமிழ் மக்களும் கடந்த காலங்களில் இலங்கைக்கே உழைத்தவர்களாகையால், அவர்கள் அங்கேயே குடியுரிமை பெறவேண்டும். அதுவுமன்றி அந்த ஒப்பந்தம் அங்குள்ள தமிழர்கள் தொகையைக் குறைத்து, அவர்களை மிகச் சிறுபான்மையராக்கி, வலுக்குறைந்தவர்களாகச் செய்து விடும் என்று தமிழர்கள் அஞ்சினார்கள்.

மேலும் இச்சிக்கல் 15 ஆண்டுக்குள் அஃதாவது 1979-க்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பது ஒப்பந்தம்.

இவ்வகையில் அப்பொழுது 5 இலக்கம் இந்தியத் தமிழர்கள் இலங்கையில் குடியுரிமை கோரினர். ஆனால் 3 இலக்கத்து 75 ஆயிரம் பேர்களுக்கே குடியுரிமை வழங்கப்பட்டது. மீதியுள்ள 6 இலக்கம் தமிழர்கள் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் 1981 செப்டம்பர்வரை 2,73,000 பேர்களே திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்று புள்ளி விளத்தங்கள் காட்டுகின்றன.

மீதியுள்ள 3,27,000 பேர்களுக்கு இன்னும் நாடற்றவர்கள் என்ற இரண்டுங்கெட்டான் நிலையே உள்ளது.

ஒரு நாட்டின் உள்முகச் சிக்கலில் வேறொரு நாடு தலையிடுதற்கு உலக ஒன்றிய அவை வழங்கும் உரிமை!

(1) ஒரு நாட்டின் உள்முகச் சிக்கல்களில் மற்றொரு நாடு தலையிடக் கூடாது.

உ. ஒ. அமை உரிமை அறிக்கை 2 7)

(2) எனினும் மக்கள் உரிமைகளும், கண்ணியமும் கொடுமைக்கு உள்ளாகின்ற சூழ் நிலைகளில் இந்தத் தடையை மீறி ஒரு நாடு வேறொரு நாட்டின் உள்முகச் செயல்களில் தலையிட்டுச் செயல் படலாம்.

— மேற்படி அறிக்கை நெறி I. (3)

மலேசியாவில் தமிழர்கள்!

மலேசியாவில் மொத்த மக்கள் தொகையில் 42 விழுக்காடு மலேசியர்களும் 36 விழுக்காடு சீனர்களும் அடுத்தபடி தமிழர்களும் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர்.

அங்குள்ள 13 இலக்கம் இந்தியர்களுள் 10 இலக்கம் பேர் தமிழர்கள். மீதிப்பேர் ஆந்திரர்கள், மலையாளிகள், பஞ்சாபிகள்.

அங்குள்ள தமிழர்களில் 70 விழுக்காட்டினர் தொய்வ ஆரப்பர், தோட்டங்களில் பணியாற்றுகின்றனர்.

அங்கு 292 தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் உள்ளன. அவற்றில் 3110 தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

தடையும், விடையும்!

பிற இதழ்களிலிருந்து சில நல்ல பக்கங்கள்!

'அரசியல்' என்றால் ஊரை அடித்து உலையில் போடுவது!

0 சி.பி. சர்வாதிகாரி, இரும்புலிக்குறிச்சி.

? மதுரை சாமியார் அருணகிரி அரசியல் பண்ணுவதன் கமுக்கம் (இரகசியம்) என்ன?

0 அரசியல் 'ஆசாமி'களுக்கும் இவருக்கும் கொள்ளையில் பங்குச் சிக்கல் (தகராறு) என்று கேள்வி. இங்கும் வடக்கேயும் அரசியல் என்றால் ஊரை அடித்து உலையில் போடுவது என்று பொருள்.

இனமானம் அன்று; பணமானம்!

0 த. சந்திரசேகரன், ஊற்றங்கரை.

? பார்ப்பனர்கள் சங்கராச்சாரியை 'சகத்குரு' என்கிறார்கள். திராவிடர் கழகமோ மதுரை மடத்தலைவரை (ஆதீனத்தை) 'லோககுரு' என்கிறது. யார் உண்மையில் 'லோககுரு'?

0 இந்தியாவில் மட்டும் இருக்கிற 3% பார்ப்பனருக்கு மட்டுமே குருவாக இருக்கிற அத்தனை சங்கராச்சாரிகளிலும் எவனும் எப்படி உலகத்துக்கு குரு ஆக மாட்டானோ, அதுபோல் தமிழரில் 2% உள்ள 'ஒரு சாதியினர்' மட்டுமே வருகிற 155 மடத்தலைவர்களில் எவனும் எல்லாத் தமிழருக்கும் கூட குரு ஆகமாட்டான்: அப்புறம் எங்கே 'லோககுரு'? இது அன்று 'இனமானம்'; இது பணமானம்! (Mammon Worship) (பணக்காரன் வணக்கம்!)

— நன்றி. 'சிந்தனையாளன்' 3-12-83

தமையிணைத்துக் கொளல் வேண்டும்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது! அரசியல் கட்சிகளும், செய்தித் தாள்களும் மக்களை பெருவாகச் சுரண்டி வருகின்றன. மதப் பேயாட்டங்கள் வீடுகள் தோறும் வீதிகள் தோறும் மக்களின் அமைதியைக் கெடுக்கின்ற வகையில் மிகவும் பெருகி வருகின்றன.

அறமன்றங்கள் செத்துப் போய் விட்டன. அறமன்ற நடுவர்கள் அமைச்சர்களின் ஏவலர்களாகி விட்டனர். காவல் துறை நடுநிலை இழந்து விட்டது. காவலர்கள் அமைச்சர்களின் கைகளில் உள்ள வேட்டை நாய்களாகி விட்டனர். நாட்டு நலம் கருதும் நடுநிலையாளர்கள், மக்களுக்கு அறிவூட்டும் அறிஞர்கள் இவர்களின் ஆக்கவடிவமான கருத்துகள் ஒரு சிறிதும் மதிக்கப் பெறுவதில்லை. நாடு குட்டிச் சுவராய்ப் போய்க் கொண்டிருக்கிறது! இஃது எங்குப் போய் முடியுமோ, எப்படி முடியுமோ எனபது மிகவும் கவலையும் அச்சமும் தருவதாக உள்ளது! நல்லவர்கள் சிந்திக்க வேண்டும்!

இன்மையின் இன்னாது உடைமை; முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். (558)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓரிடத்தில் கூட ஒரு சிறு குலுங்கும் குலுக்கவில்லை! சாலைகள் மெழுகை உருக்கிவார்த்தன போல் அவ்வளவு வழுவழுப்பாக இருந்தன. இத்தனைக்கும் காறைச்சாலைகள்தாம்! நம் நாட்டில் ஒரு சாலையும் அப்படி இல்லையே! நமக்கு இன்னும் சாலைகளையே அமைத்துக் கொள்ளத் தெரியவில்லை. ஊர்களையும் நகர்களையும் எங்கே அமைக்கப் போகிறோம்? இனி, ஊர்களையும் நகர்களையும் உருவாக்காமல், மக்களை எங்கே முன்னேற்றப் போகிறோம்! நம் அரசியல் தாரர்கள் தாம். ஊர்களையும் நகர்களையும் மட்டுமன்று மக்களையும் உறிஞ்சிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்களே! எங்கே, நாம் உருப்படுவது?

பெரும்பாலும், பிரான்சு வீதியும், பிரிட்டீசு (நீதியும்) நெறியும், என்பார்கள்! ஆனல் அவர்களின் நெறியைவிட, பிரெஞ்சு வீதிகள் நேராகவும் கரடு முரடு, இல்லாமலும், தூய்மையாகவும், அழகாகவும் இருந்ததைக் கண்டு மிக வியந்துபோனேன். சரியாக மாலை 7 மணியளவில், திரு. அரிமா வளங்கோ குடியிருப்புப் பகுதியில் வண்டி நுழைந்தது.

(தொடரும்)

3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்வாழ்வியலை வளப்படுத்தியும் நிலைப்படுத்தியும் கொள்வாரேயோ, அவ்வாறே தொடக்கத்தில் இந்நாட்டிற்கு வந்த ஆரியர்களும் நடந்து கொண்டதாகவே நம் நூல்கள் வழியாக உணர முடிகிறது. ஆனல், அவர்களின் வரவுக்கு ஓர் ஐநூறு, அல்லது எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் நிலைகள் அடியோடு மாறிப் போய்விட்டன.

அவர்களின் கை ஓங்கத் தொடங்கியது. அவர்களில் சிலர் தமிழ் மொழியைக் கற்றுப் பெரும் புலவர்களாக விளங்கினர்கள். பலர் அரசியலில் நுழைந்து அமைச்சர்களாகவும் குருக்களாகவும் தூதுவர்களாகவும் அதிகாரம் பெற்றார்கள். மக்கள் வாழ்வியல், குமுகாயவியல், கல்வியியல் முதலியவற்றுள் அவர்கள் நடைமுறைகளை — நெறிமுறைகளைப் படிப்படியாகப் புகுத்தினர்கள். இந்தத் தாக்கங்கள் தோன்றிய பின்னர்தாம் நம் மொழியும் இனமும் சீரழியத் தொடங்கின.

இந்தக் காலக் கட்டத்தில்தான் திருவள்ளுவர் தோன்றியுள்ளார். அவர் கூறிய மதிநுட்பமும், தீவிர இனப்பற்றும், சிறந்த அறிவுணர்வும், எதிர்கால உய்த்துணர்வும் கொண்டவராகையால், இத்தமிழினம் பலவகையாலும் சீரழிவுற்று, மிகத்தாழ்ந்து போகும் என்று கண்டுணர்ந்தார் அதற்காகப் பெரிதும் வருந்தினர். அதனை எவ்வாறேனும் தடுத்து நிறுத்தி, அக்கால அறிஞர்களையும் பொதுமக்களையும் விழிப்புணர்வு கொள்ளச் செய்ய வேண்டும் என்று மிகவும் விரும்பினர். ஆனல், அக்காலச் சூழலில் அரசியல் வலிமை பெற்றும், அறிவால் மிகச்சிறந்து விளங்கியும் இருந்த ஆரியத்தை நேரடியாக எதிர்த்துப் போராடவும், மக்களுக்கு நேரிடையாக எடுத்துச் சொல்லவும், அறிஞராகிய அவர்க்கு இயலாமல் இருந்திருக்க வேண்டும். மேலும் ஆரிய அறிஞர்கள் மேலும் அரசியல் ஈடுபாடுகள் கொண்ட ஆரிய அதிகாரிகள் மேலும். அக்கால அரசர்கள் அளவிறந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டவர்களாக இருந்ததும், அவர்களின் இனநலத் தலைவர்கள் மண், பொன், பெண் நாட்டங்கள் ஊட்டித் தமிழ அரசர்களை மதியங்கச் செய்து பலவகைச் சூழ்ச்சிகளைக் கையாண்டதும், இவர் போலும் அறிஞரை ஒரு வகையாலும் வெளிப்படையாக, இயங்காமல் செய்திருக்கலாம் அவ்வகையில் ஒரு கருத்தைக் கூறுவதும் கூட அவர்க்கு இயலாமல் இருந்திருக்கலாம்.

இந்த நிலையை, இப்பொழுதுள்ள நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு விளங்கும். அறிவியல் மிக வளர்ச்சி பெற்றும் மாந்த உரிமைகள் மிகக் கிளர்ச்சியுற்றும், வாழ்வியல் போராட்டங்கள் மிக எழுச்சி பெற்றும், குடியரசு அமைப்புகளும், அறமன்றச் சட்ட முறைகளும், கல்வி மேம்பாடும் மிக்கோங்கியும் உள்ள இக்காலத்திலேயே, வடஇந்திய ஆரிய அரசியல் வல்லாண்மைக்கு, இங்குள்ள அறிஞரும், அரசியல் தலைவர்களும், பொதுநலப் போராட்டத் திறவோர்களும், ஆரியப் பார்ப்பனியத்துக்கு எதிரான கருத்துகளைச் சொல்லவும், முயற்சிகளைச் செய்யவும், உள்ளம் அஞ்சி உயிர் நடுங்கிச் சாகின்றார்கள் என்றால், அக்கால நிலையில் திருவள்ளுவர் போலும் மெய்யுணர்வு சான்ற, இன நலங் கருதிய ஒரு குமுகாயப் பேரறிஞர் எவ்வாறு இருந்திருக்க வேண்டி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பார்க்கு விளங்காமல் போகாது.

இப்பொழுதுள்ளது போல் தம் கருத்துக்கெனவும், முயற்சிகளுக்கெனவும் வலிவான ஒரு மக்கள் கூட்டத்தை நமக்குத் துணையாக அன்று உருவாக்கிக் கொள்ள இயலாது. மக்களை ஊர் ஊராய்ப் போய் அணுகவும், அவர்களிடம் தம் கருத்துகளை எழுதிப் பரப்பவும், கூட்டம் கூட்டிக் கூறவும், ஒரு சிறிதும் வாய்ப்பற்ற காலம் அந்தக் காலம். எழுத்துரிமையும் பேச்சுரிமையும் செயலுரிமையும், குடியரசுச்சமைப்புப் பரவலாக உள்ள இன்று போல், முடியரசாளுமை வலிமைபெற்ற அக்காலத்தில், இருந்தன என்று கருத முடியாது. இன்னுஞ் சொன்னல், ஒரு சிறு அளவிலும் கூட இருந்திருக்கவே வாய்ப்பில்லை. நக்கீரர் போலும் புலவர்கள் கூடக் கவுள் வடிவாக வந்தவராகக் கருதப்பட்ட ஓர் அரிய ஏமாற்றுக்காரப் புலவரைத்தாம் எதிர்த்துப் பேச முடிந்திருக்குமே தவிர, ஓர் அரசரை எதிர்த்துப் பேசி உயிர் தப்பியிருக்க முடியாது. புறநானூற்றில் அரசர்க்கு அறிவுரையும் அறவுரையும் கூறிய புலவர்களாக நமக்குத் தெரிய வருபவர்கள், அவர்களின் அறிவுச் சூழ்ச்சியாலும், திறத்தாலும், கருத்தாட்சியாலும், சொல்வன்மையாலும், நயந்தும், குழைந்தும் அவ்வாறு செய்ய முடிந்தனவாக நிகழ்ச்சிகள் கூறுகின்றனவே தவிர, அரசனை நேரிடையாக எதிர்த்துக் கொண்டு கருத்துக் கூறியதாக நிகழ்ச்சிகள் இல்லை.

இவற்றையெல்லாம் இங்கு எதற்குக் கட்டுரைத்துக் கூறுகிறோம். என்றால், திருக்குறளில் கூறப்பெற்ற கருத்துகளில் பெரும் பாலானவை, ஏன் முழுவதுமே, தமிழின நலமும் அதன் முன்னேற்றமும் கருதியே கூறப்பட்டவை என்பதை இன்னமும் பலர் உணராமல் இருக்கின்றனரே, என்பதற்காகவும், தமிழ் இன நல முன்னேற்றம் கருதுபவர்கள் அவற்றை எக்காலத்தும், எந்நிலையிலும் புறக்கணித்துவிடக் கூடாது என்பதற்காகவும், அவ்வாறு புறக்கணித்து விட்டால் உண்மையான தமிழின முன்னேற்றத்தை உருவாக்கி விட முடியாது என்பதற்காகவுந் தாம்!

இந்த நோக்கத்தை மறைப்பதற்காகத்தான், ஆரிய உரையாசிரியர்களும், அவர்களின் அடிவருடிகளும், அறியாமைப் புலவர்களும், இன்றும் அதனை வெறும் அறநூல் என்றும் தமிழ்நூல் என்றும் ஒரோவொரு கால் அதனை ஒரு வாழ்வியல் நூல் என்றுமேகூறினர்; கூறி வருகின்றனர். நாம் கூறுகிறோம், அஃது ஒரு வரலாற்று நூல் அதுவும் தமிழின வரலாற்று நூல். அதில் கூறப்பெற்றுள்ள இன வரலாற்றுக் கருத்துகளையும், இனநல மீட்சிக் கருத்துகளையும் புறக்கணித்து விட்டு, எந்த அரசியல் தலைவனாலும், வீழ்ந்து கிடக்கும் இவ்வேதுங் கெட்ட தமிழினத்தை மீட்டு முன்னேற்றி விட முடியவே முடியாது. இந்த உண்மையை இனிமேல் பெறவிருக்கும் கருத்துகளால் வலிவு படுத்திக் காட்டுவோம். (தொடரும்)

‘கழக அருளாளர்’ தென்மொழி
நா. இளமாறன் அவர்களின் அன்புக் கொடை

கடந்த இரு மாதங்களுக்கு முன் அரசினர் நேர்ந்த பெருந்தொகை இழப்பையும், ‘தமிழ்நிலம்’ வெளியீட்டு வகையில் நேர்ந்துவரும் பொருள் முட்டுப்பாட்டையும், அலுவலகத்திற்கு நேரில் வந்து கண்டு இரங்கிய அன்புள்ளமும் அருளாண்மையும் கொண்ட தென்மொழி நா. இளமாறன் அவர்கள் அவ்விழப்புகளுக்கு ஈடுசெய்யும் வகையில் உ.த.மு. கழகத்திற்கென உரு. 250 (உருபா இரராயிரத்து ஐநூறு) நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பதையும், இதன்வழி, ‘கழக அருளாளர்’ என்னும் சிறப்புப் பெயர்த் தகுதிக்கு உரியவர் ஆகிறார் என்பதையும் மகிழ்வுடனும் நன்றியுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

‘கழக அறக்கொடையர்’
பல்லடம் திருக்குறள் மன்றத்தார் வாழ்க!

மேலே சுட்டிய அதே நிலைகளுக்கென அன்பும் அருளாண்மையும் கொண்ட பல்லடம், திருக்குறள் மன்றத்தாரும் ‘தமிழ்நில’ வளர்ச்சிக்கென உருபா 1000 (உருபா ஆயிரம்) நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்பதையும், இதன்வழி ‘கழக அறக்கொடையர்’ என்னும் சிறப்புப் பெயர் தகுதிக்கு உரியவர் ஆகிறார் என்பதையும் மகிழ்வுடனும், நன்றியுடனும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்னை-5　　முதல்வர்
9-12-83　　உ.த.மு.க.

நடுவணரசு-மாநில அரசு அதிகாரப் பங்கீடுகள்.

இந்திய அரசியல் சட்டப்படி மொத்த அதிகாரங்கள் 210.

இவற்றுள் நடுவணரசுக்கு உள்ள அதிகாரங்கள் 97 மாநில அரசுகளுக்கு 66.

இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் 47.

நடுவணரசுக்குள்ள அதிகாரங்கள் அனைத்தும் கொழுத்த வருவாயுள்ளவை. அவற்றுள் இனங்கள் மிகவும் முகாமையானவை. அதிகாரங்கள் வரியிடுதல் பற்றியன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும்.　பதிவு எண்: TN/MS/(C)/657

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள்:

- o தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- o சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- o இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- o தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- o மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- o பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- o எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை— 5

பெறுநர்.　　நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணசலத் தெரு, சென்னை-5.